

இராணிப்பேட்டை மாவட்டத்தில் மகளிர் குழு தினத்தை முன்னிட்டு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி வங்கிக்கடன் ஆணைகளை மகளிர் குழுக்களுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் ஜே.யூ.சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, வாலாஜா நகராட்சி தலைவர் ஹரிணி தில்லை, இராணிப்பேட்டை நகராட்சி தலைவர் சுஜாதா வினோத்,ஊராட்சிஒன்றிய குழுத்தலைவர்கள் வாலாஜா சேஷாவெங்கட ரமணன், திமிரி அசோக், ஆற்காடு புவனேஸ்வரி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மறைந்த விக்கிரவாண்டி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கு.ராதாமணியின் நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### திண்டுக்கல் மாவட்டத்தில் – பால்வளத்துறை சார்பில்

# 93 பயனாளிகளுக்கு ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் மனோதங்கராஜ் நேரில் ஆய்வு மேற்கொண்டு வழங்கினார்!

திண்டுக்கல், ஜூன்.12-

திண்டுக்கல் மாவட்டம் பால்வளத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ் திண்டுக்கல் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டு, 93 பயனாளிகளுக்கு ரூ.4.17 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ், நேற்று முன்தினம் (10.06.2025) திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், தலைமையில் நடைபெற்ற திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., மற்றும் பால் வளத்துறை ஒருங்கிணைந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, துறைசார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு, 93 பயனாளிகளுக்கு ரூ.4.17 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

ஆய்வுக்கூட்டத்தில், பால்வளத்துறை அமைச்சர் அவர்கள், திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., வாயிலாக விற்பனை செய்யப் படும் பால் அளவு குறித்தும், மாவட்டத்தில் செயல்படும் பால் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களிடமிருந்து பெறப்படும் பால் கொள்முதல் செய்யப்படும் அளவு, தயாரிக்கப்படும் பால் பொருட்கள் வகைகளின் எண்ணிக்கை மற்றும் அளவுகள், பால் குளி ரூட்டும் மையங்களின் எண்ணிக்கை, பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களிட மிருந்து பால் கொள்முதல் செய்து பால் பண்ணை மற்றும் மொத்த குளிரூட்டும் மையங்கள் ஆகிய இடங்களுக்கு கொண்டு செல்வதற்கு ஏதுவாக செயல்படும் பால் சேகரிப்பு வழித்தடங்களின் விவரம், நுகர்வோர்களுக்கு பால் விநியோகம் செய்ய ஏதுவாக பால் பாக்கெட்களை விற்பனைக்கு கொண்டு செல்ல பயன்படும் வழித்தடங்களின் விவரம் குறித்து விரிவாக கேட்டறிந்தார். மேலும், பால் உற்பத்தியை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில், பால்வளத்துறை அமைச்சர் அவர்கள், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் பகுப்பாய்வு கருவிகள், கணினி மற்றும் அச்சு இயந்திரங்கள், பசுந்தீவன விதைகள், 3 லிட்டர் திரவ நைட்ரஜன் குடுவை, கறவை மாட்டுக்கடன், கால்நடை பராமரிப்புக் கடன், உற்பத்தியுடன் இணைந்த ஆதரவளிக்கும் ஊக்கத்தொகை என மொத்தம் 93 பயனாளிகளுக்கு ரூ.4.17 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள், விவசாயம் மற்றும் விவசாயிகளின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பால் வளத்துறையானது பல இலட்சம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை தீர்மானிக்கும் துறையாக உள்ளது.

பேரறிஞர் அண்ணாத்துரை அவர்கள், ஏழையின் சிரிப்பில் இறைவணைக் காணலாம் என்றார்கள். அந்த வகையில், ஏழைகளில் வாழ்வாதாரத்தை உயர்த்தி, அடுத்தக்கட்டத்திற்கு அவர்களை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**45 லட்சம் லிட்டர் பால் கொள்முதல்!**

ஆவின் நிறுவனமானது விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பொதுத்துறை நிறுவனமாகும். தமிழ்நாட்டில் ஆவின் மூலம் தினமும் 36 லட்சம் லிட்டர் பால் கையாளப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, பல்வேறு நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது. ஆவின் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பலனாக வருங்காலங் களில் 45 லட்சம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்ய வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

பால் மற்றும் பால் பொருட்களின் பயன்பாடு நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. எனவே, பால் பயன்பாட்டு தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ஆவின் மூலம் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதர பாலினை கொண்டு பால் உப பொருட்களான பன்னீர், பால்கோவா, தயிர், நெய் என சுமார் 200க்கும் மேற்பட்ட இதர பால் உபபொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**லிட்டருக்கு ரூ.10 வரை கொள்முதல் விலை உயர்வு!**

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.3.00 உயர்த்தி வழங்கப்பட்டது. அதன்பின்னர் உற்பத்தியுடன் இணைந்த ஆதரவளிக்கும் ஊக்கத்தொகை, கூடுதல் பால் உற்பத்திக்கான ஊக்கத்தொகை, தரத்திற்கேற்ப விலை உயர்வு என இதுவரை லிட்டருக்கு ரூ.10.00 வரை கொள்முதல் விலை உயர்த்தப் பட்டுள்ளது.

ஆவின் நிறுவனங்களில் செலவை குறைக்க மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக மின் கட்டணம் 15 சதவீதம் குறைக்கப்பட்டு ரூ.52.00 இலட்சம் சேமிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களையும் லாபத்தை நோக்கி செயல்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக, திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமானது 181 கூட்டுறவு சங்கங்கள் மூலம் தினமும் 95 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் அதிகப்படியான கால்நடைகள் வளர்க்கப்பட்டு வருகிறது. அனைத்து பகுதிகளிலும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் துவங்குவதற்கும், அதிகப்படியான கால்நடை வளர்ப்போர்களை உறுப்பினர்களாக சேர்த்து பால் கொள்முதல் செய்திடவும், விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கிடவும், நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும் இன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாநில அளவில் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், ஆவின் கொள்முதல் திறனை கையாளவும், விவசாயிகளுக்கு தரமான கறவை மாடுகள் வழங்கவும் தொலைநோக்கு பார்வையுடன் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன, என பால்வளத்துறை அமைச்சர்த.மனோதங்கராஜ் தெரிவித்தார்.

முன்னதாக, பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பால் பொருட்கள் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் விரும்பி சாப்பிடும் உணவுப் பொருட்கள் என்பதால் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுவதை உறுதி செய்வதுடன், இயந்திரங்களை அவ்வப்பொழுது தூய்மையாக பராமரித்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்தஆய்வில், பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்துார் சட்டமன்ற உறுப்பினர்ச.காந்திராஜன், வணக்கத்திற்குரிய திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், உதவி ஆட்சியர்(பயிற்சி) மரு.ச. விநோதினி பார்த்திபன், திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் ச.ராஜப்பா, திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் இரா.சக்திவேல், திண்டுக்கல் மண்டல கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் சி.குருமூர்த்தி, திண்டுக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் திருமதி சுபாஷிணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கோட்டைகுமார், திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் பொது மேலாளர் மரு.க.வாணீஸ்வரி, துணைப்பதிவாளர்(பால்வளம்) அ.இரணியன், திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.


## பெருநகர சென்னை மாநகராட்சி
### மண்டலம் -13

ம. அ. 13. ந. க. எண். சி2/2548/2025

**e-மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**கீழ்கண்ட பணிக்கு உதவி ஆணையர் (பொ) / ம-13 அவர்களால் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது :**

**2024 - 25 ம் ஆண்டு தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி**
மண்டலம்-13, பகுதி-39, வார்டு-176ல், ராம் நகர் வடக்கு 1வது தெரு விரிவில் அமைந்துள்ள விளையாட்டு திடலில் உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி

| | |
|---|---|
| பணியின் உத்தேச தொகை ரூ. **82,91,666.66** லட்சம் | ஒப்ப முன் வைப்புத் தொகை ரூ. **83,000** ஆயிரம் |

ஒப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **26.06.2025** அன்று பிற்பகல் **3.00** மணி வரை

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **27.06.2025** அன்று பிற்பகல் **3.30** மணி

செ.ம.தொ.இ / 2932 / ஒப்பந்தப்புள்ளி / 2025

**உதவி ஆணையர் (முதுநிலை) (பொ) / ம-13**

## பெருநகர சென்னை மாநகராட்சி
### இயந்திர பொறியியல் துறை

இ. பொ. து. ந. க. எண். எம்1/0709/2025

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது.**

8 எண்ணிக்கையில் இயற்கை எரிவாயு **(CNG)** மூலம் இயங்கும் கால்நடைகளை பிடிக்கும் வாகனங்களை கொள்முதல் செய்யும் பணி

முன்வைப்பு தொகை: ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **26.06.2025** பிற்பகல் **3.00** மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் : **27.06.2025** பிற்பகல் **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்

செ.ம.தொ.இ / 2933 / ஒப்பந்தப்புள்ளி / 2025

**கண்காணிப்பு பொறியாளர் (இ)**




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வி.கணேசன் ஆலோசனைப்படி திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் கிழக்கு ஒன்றியம் கீழச்செருவாய் ஊராட்சியில் மங்களூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பட்டூர்.வீர. அமிர்தலிங்கம் தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆக்கனூர் செ. பாரதிராஜா நிகழ்ச்சி ஏற்பாட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவ – மாணவியர்களுக்கு மதிய உணவு பரிமாறப்பட்டது. உடன் ஆசிரியை பெருமக்கள் மற்றும் கிளைச் செயலாளர் ரவி, ரமேஷ், சூரிய பிரகாஷ் மற்றும் ஒன்றியக் கழக, கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ஆண்டிப்பட்டி தி.மு.க. முன்னாள் ஒன்றிய கழக செயலாளர்

# எஸ்.வைகை சேகர் தாயார் ராஜாங்கம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



ஆண்டிப்பட்டி, ஜூன் 12-

ஆண்டிப்பட்டி தி.மு.க. முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வைகை சேகர் தாயார் ராஜாங்கம் அவர்கள் 10.06.2025- செவ்வாய் அன்று மதியம் 1.30 மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அம்மையாரின் உடல் நேற்று (11.06.2025) மதியம் 2 மணியளவில் வைகைப்புத்தூரில் நல்லடக்கம் செய்யப் பட்டது.

இறுதி ஊர்வலத்திலும் கழகத்தினர் பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

### விழுப்புரம் முன்னாள் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்

# இரத்தினம் (எ) ஆர்.இராசரத்தினம் வாகன விபத்தில் மறைவு!



விழுப்புரம், ஜூன். 12-

விழுப்புரம் வட்டம் விழுப்புரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோலியனூர் ஒன்றியம் கப்பூர் மதுரா ஒருகோடி நெற்குணம் கிராமத்தில் பிறந்தவர் , முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கழக முன்னோடி இரத்தினம் (எ) ஆர்.இராசரத்தினம் (வயது 79) அவர்கள் வாகன விபத்தில் மறைந்தார். மனைவி சரசுவதி அம்மாள், மகன் வழக்கறிஞர் இரா.இராஜேஷ், மகள் சுபா ஆவர்.

ஒருகோடி கிராமத்தின் கிளை கழக செயலாளராக தனது அரசியல் வாழ்வை தொடங்கி பின்பு கோலியனூர் ஒன்றியத்தில் மாவட்ட பிரதிநிதியாக பல ஆண்டுகள் கழகப் பணியாற்றியவர், கப்பூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் கோலியனூர் மேற்கு பகுதியில் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும் விழுப்புரம் நிலவள வங்கி தலைவராகவும் இருந்து மக்கள் பணியாற்றியவர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தமிழால், மக்கள் பணியால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

தொடர்ந்து மாநில சுயாட்சிக்கும் மாநில உரிமைகளுக்கும் குரல் கொடுத்து போராடி வரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மீதும், துணை முதலமைச்சர் அவர்கள் மீதும் தீராத பற்றும், அன்பும் கொண்டு கிராமங்களில் மக்களின் மனதை புரிந்து கொண்டு கழகப் பணியாற்றியவர். முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களுடன் 1989 ஆம் முதல் தனது இறுதி மூச்சு வரை இணைந்து இயக்கப் பணிகளை செவ்வனே ஆற்றியவர். அப்படிப்பட்ட கழகப் போராளி இராசரத்தினம் அவர்கள் மறைவு கழகத்தினரிடையே பெரும் துயரத்தை ஏற்படுத்தி உள்ளது. கோலியனூர் ஒன்றிய கழகத்தினருக்கு அவருடைய இழப்பு பேரிழப்பாகும்.

அன்னாருடைய இறுதி ஊர்வலம்நேற்று(11.06.2025) மாலை 4.00 மணியளவில் அவரது சொந்த ஊரான கப்பூர் , நெற்குணம் ஒருகோடி கிராமத்தில் நடைபெற்றது.



நீலகிரி மாவட்டம், உதகை தமிழக அரசு விருந்தினர் மாளிகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் (2024–2026) ஆய்வுக் கூட்டம், தலைவர் லட்சுமணன் மற்றும் குழுவின் உறுப்பினர்கள் தேவராஜ், பாண்டியன், வில்வநாதன் ஆகியோர் தலைமையிலும், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையிலும் நேற்று (11.06.2025) நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், இணைச்செயலாளர்கள் பூபாலன், திருமதி.சாந்தா உட்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. வாசுதேவன்

**ஜூன் 12 (2020)**



**தனது இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும், அண்ணாகிராம ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, ஒன்றிய பொருளாளர் என கழகத்தில் பொறுப்புகள் வகித்தவர்.**

**ஊராட்சி மன்றத் தலைவர், ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்க தலைவர் அருங்குனம் கூட்டுறவு சங்க இயக்குநர் என பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**